உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௩.] தாது ௵ ஐப்பசி ௴ [பகுதி-௧௨.

Vol. XXXIII. October–November 1936. No. 12.

உள்ளுறை.

செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்:—(அநுபந்தம்)

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். ௩௧௭—௩௨௬

இரண்டாம் இராஜாதிராஜன்:—ஸ்ரீமத். திரு. சோமசுந்தரதேசிகர். ௩௨௭—௩௩௭

சென்னைப் பல்கலைக்கழகக் கமிஷனர்களுக்கு மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் படித்துக்கொடுத்த வரவேற்புப்பத்திரம்:— ௩௩௮

பாண்டியர்வரலாறு:—ஸ்ரீமத். T. V. சதாசிவபண்டாரத்தார் ௩௩௯

மதுரைத்தமிழ்ச்சங்கநிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— ௩௪0

ரமாமணி:— ஸ்ரீமத். V. S ராமஸ்வாமி சாஸ்திரியார் B.A. B.L. ௩௪௧—௩௪௮

செந்தமிழ் ௩௩-ஆந் தொகுதியின் உள்ளுறை முதலியன:—

சிராமலைக்கோவை:- (குறிப்புரையுடன்) ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 121—128

குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார். 353—360

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1936.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No 54, New Jail Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*7.	தோத்திரத்திரட்டு			
*8	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
*	௸ இரண்டாம்பாகம்	4	8	0
	௸ மூன்றாம்பாகம்	5	0	0
*9.	அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ

"செந்தமிழ்" நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற முப்பத்துமூன்ற
காலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமு
வெளியிடப்பெற்றுவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகையானது, ப
பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதி
எல்லோருமுணர வெளியிடும்பெருமைவாய்ந்ததென்பது யாவரும்
அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும்
பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு முப்ப
மூன்றுந்தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, முப்பத்துநால
தொகுதி தொடங்கப்பெற்று, அதன் முதற்பகுதி நளிது தாது வரு
கார்த்திகைமீ முதற்றெய்தி வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி
அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அந்
தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. யில் அனுப்பப்பெறும்
செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகை
யை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகை
யைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள்
சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்துவரவும்
வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

N. B. முப்பத்துநான்காந்தொகுதிச் சந்தாத்தொகையை
மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள
விரும்புவோர், நளிது தாது வரு ஐப்பசிமீ 25உக்குள் இச்ச
ப்பிசிற் ... தக் கிடைக்கும்படி மணியார்டரை அனுப்பிவைத்த
ண்டும். ... துதற்குள் மணியார்டர் வாராவிட்டால் முப்பத்
தொகுதியின் ... முதற்பகுதி வழக்கப்படி வி. பி. மூலம் அனு
றும். வி. பி. அனுப்பிய ... ன், அதனை அங்கிகரிக்காது தி
யனுப்புவதால் சங்கத்துக்கு வீண்செலவு ... நேரிடுமாதலால்
செய்து வி. பி. யை அங்கிகரித்துச் செந்தமிழை
வருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௩] தாதுஹூ ஐப்பசிமீ [பகுதி-கஉ.

Vol. XXXIII. October-November 1936. No. 12.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[௨௯௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இனி முடிப்புரை கூறப்படும். இம்முடிப்புரை நியாயப்பிரவேசத்தில் இல்லை, மணிமேகலையில் உள்ளது; அது வருமாறு:—

"நாட்டிய விப்படித் தீயசா தநத்தாற்
காட்டு மனுமான வாபா சத்தின்
மெய்யும் பொய்யு மித்திற விதியா
லைய மின்றி யறிந்துகொ ளாய்ந்தென்" (௪௭௦-௭௩)

என்பது.

இதனுள், 'நாட்டிய விப்படித் தீயசாதநத்தால்' என்பதை 'இப்படிநாட்டிய தீயசாதநத்தால்' எனக் கூட்டுக.

இதன்பொருள்: 'இவ்வாறு நிலைபெறச்செய்த தீயசாதநத்தாற் காட்டற்குரிய அநுமானத்தின் மெய்யும், அதன் ஆபாசத்தின் பொய்யும் ஆராய்ந்து ஐயந்திரிபின்றி அறிந்துகொள்ளக்கடவை' என்றவாறு.

'இப்படி' என்றது பக்கப்போலி, எதுப்போலி, திருஷ்டாந்தப் போலிவகைகளுக்கெல்லாம் இலக்கணங்கூறி உதாரணங்காட்டி விளக்கியபடியைச் சுட்டியவாறு.

'நாட்டிய' என்றது பிறரால் மறுக்கவொண்ணுதபடி நிலைபெறு மாறு கூறப்பட்டன என்றவாறு. 'நாட்டிய' எனச் செயப்படுபொருள் செய்ததுபோலக் கூறப்பட்டது.

தீயசாதநங்களாவன: பக்கப்போலியும், ஏதுப்போலியும் திருஷ்டாந்தப்போலியுமாகிய குற்றமுள்ள சாதநவாக்கியங்கள்.

'தீயசாதநத்தாற் காட்டும்' என்றது தீயசாதநத்தாற் காட்டுதற்கு உரியனவாயுள்ள என்றவாறு.

'அனுமானவாபாசத்தின்' என்றது உம்மைத்தொகைநிலைத் தொடராய் ஆறுருவதன்பொருட்கண் அத்தும் இன்னும் பெற்று, ஆறனுருபு செய்யுள்விகாரத்தாற் கெட்டுநின்றது; இதனுல் நல்ல அனுமானத்தினுடையவும், (அனுமான) ஆபாசத்தினுடையவும் என்பது பொருளாகக் கொள்க. 'ஆபாசத்தின்' என அனுமானுபாசம் பின்சொல்லப்படுதலால், முன்னின்ற அனுமானசப்தத்திற்கு நல்லனுமானத்தினுடையவும் எனப் பொருளுரைக்கப்பட்டது. 'ஆபாசத்தின்' என்றது அனுமானசப்தத்தை அடுத்துநிற்றலால் அதற்கு அனுமானவாபாசத்தின் எனப் பொருளுரைக்கப்பட்டது.

'மெய்யும் பொய்யும்' என்றது, நிரனிறையால் நல்லனுமானத்தின் மெய்யும், அனுமானுபாசத்தின் பொய்யும் என்றவாறு. ஆபாசம் - போலி. ஆபாசத்தின் என வாளாகூறினமையால் அதன் பொருள் பக்கப்போலி, ஏதுப்போலி, திருஷ்டாந்தப்போலிகள் என்பது பெறப்பட்டது; அப்போலிகள் அனுமானவாக்கியத்தின் உறுப்புப்பற்றிநிகழ்தலால் அவை அனுமானுபாசமாயின.

'இத்திறவிதியால்' என்றது "இத்திறம் நல்லசாதநத் தொத்தன" என முற்கூறிப்போந்த நல்லசாதநவிதிகளும், அதன்பின் இதுகாறும் கூறிவந்த தீயசாதநவிதிகளுமாகிய இவற்ருல் என்றவாறு.

திறம்--வகைவேறுபாடு. இவ் வகைவேறுபாடுள்ள விதிகளால் என்றபடி. விதி எனினும் கட்டளை எனினும் ஆணை எனினும் ஒக்கும்.

'ஐயமின்றி அறிந்துகொள் ஆய்ந்து' என்றிருப்பதை ஆய்ந்து ஐயமின்றி அறிந்துகொள் எனக் கூட்டுக. ஆய்ந்து—ஆராய்ந்து; அதாவது இவ்வாற்றான் இது பொருந்தும், இவ்வாற்றான் இது பொருந்தாது எனத் தேர்ந்து என்றபடி.

'ஐயமின்றி' என்றது ஐயமும் திரிவுமின்றி என்றவாறு. ஐயம் திரிவு தருக்கம் என்னும் பொய்யுணர்வு மூன்றனுள் தருக்கம் திரிவினுளடங்குதலால் ஐயமும் திரிவுமின்றியென்று பொருளுரைக்கப் பட்டது. தருக்கம் தானறிந்த பொய்யுணர்வாதலால், அஃதீண்டைக்கு ஏலாதெனினுமாம். ஐயம் என்றது சமுச்சயவாசகமாய் அதனோடொத்த பொய்யுணர்வாகிய திரிவையும் அகப்படுத்தியது உபசாரவழக்கு.

'மெய்யும் பொய்யும் அறிந்துகொள்' என்றது நல்லனுமானத்தின் மெய்யும், அனுமானாபாசத்தின் பொய்யும் அறிந்துகொள்வாயாக என்றவாறு.

நல்லனுமானத்தால் உண்டாம் உணர்வு மெய்ப்பொருளுணர்வு என்பதும், அனுமானவாபாசத்தாலுண்டாமுணர்வு பொய்ப்பொருளுணர்வு என்பதும் போதர அச்சாதநங்களுக்கு அவ்வுணர்வுகளை உரிமைபாக்கி ஆறனுருபுவிரித்துப் பொருளுரைக்கப்பட்டது.

'இப்படி நாட்டிய தீயசாதநத்தாற் காட்டும் அனுமானத்தின் மெய்யும், அதன் ஆபாசத்தின் பொய்யும் இத்திறவிதியால் ஆய்ந்து ஐயமின்றியறிந்துகொள்' எனக் கூட்டி முடித்துக்கொள்க.

அனுமானம் தீயசாதநத்தாற் காட்டப்படுவதெங்ஙனமெனின் தீயசாதநங்களின் கூற்றால் ஆபாசம் காட்டப்படும் பொழுதே அங்ஙனமல்லாத நல்லசாதநவுறுப்புக்களும் அவ்வுறுப்புக்களானாகிய நல்லனுமானமும் குறிப்பாற் கொள்ளக்கிடத்தலால் தீயசாதநத்தால் நல்லனுமானமும் காட்டப்பட்டதாமென்க.

நல்லனுமானத்தாலுதிப்பது மெய்யுணர்வாதலால் அம்மெய்யுணர்வு நல்லனுமானத்தின் மெய்யெனப்பட்டது.

அனுமானவாபாசத்தாலுதிப்பது பொய்யுணர்வாதலால் அது ஆபாசத்தின் பொய் எனப்பட்டது.

பொய்யுணர்வில்லாவுணர்வே மெய்யுணர்வு என்றுணர்தற் பொருட்டுப் பொய்யும் உடன்கூறப்பட்டது.

'அடிகள் மெய்ப்பொருள் அருளுக' என்பதனால் மெய்ப்பொருளறியவேண்டிநின்றாட்கு, அம்மெய்ப்பொருளறிதற்குக்கருவியாகிய பிரமாணநிரூபணம்செய்து அதன் வாயிலாகப் பொய்ப்பொருளையொழித்து மெய்ப்பொருளையறியவேண்டும் என்பதுதோன்ற 'மெய்யும் பொய்யும்' எனப் பொய்யும் உடன்கூறினாராயிற்று.

'என்' என்றது வடமொழியுள் கட்டுரையின் முடிவுகாட்டும் இதி (ஐதி) சப்தத்தின் பரியாயமாய்த் தமிழ்மொழியில் பயிலப்படுவதோரிடைச்சொல்விசேடம்; அஃது ஈண்டு ஈற்றசையாயிற்று. இது என, என்க, என்ப; எனத் திரிதலுமுண்டு.

இங்ஙனம் மணிமேகலையின் முடிப்புரை கூறப்பட்டது; இனி மணிமேகலையிலில்லாமலே நியாயப்பிரவேசத்திலுள்ள இறுதிப் பகுதி ஆராயப்படும்.

நியாயப்பிரவேசத்தொடக்கத்தில் நூற்பொருட்சுருக்கம் சொல்லியவைகளுள் மணிமேகலையிற் சொல்லப்படாத மற்றைய பகுதிகள், நியாயப்பிரவேசகத்து 52-முதல் 65-வரையுள்ள 14-சூத்திரங்களாற் சொல்லப்படுகின்றன. அவையும் மணிமேகலையின் வேறுபட்டமை காட்டற்குரியனவாதலால் ஈண்டு ஆராயப்படுகின்றன. அவை:

(1) சாதநாபாசம் (கருவிப்போலி)

(2) ஸ்வார்த்தப்பிரமாணம் (தன்பொருட்டளவை)

(3) பிரத்தியக்ஷம் (காண்டலளவை)
(4) அனுமானம் (கருத்தளவை)
(5) பிரத்தியக்ஷாபாசம் (காட்சிப்போலி)
(6) அனுமானுபாசம் (கருத்தளவைப்போலி)
(7) தூஷணம் (வழுவெடுத்துரைத்தல்)
(8) தூஷணுபாசம் (போலிவழுக்கூற்று)

என்பன. அவை வருமாறு:—

(52) ஏஷாம் பக்ஷஹேது த்ருஷ்டாந்தாபாஸாநாம்
வசநாநி ஸாதநாபாஸம் ॥

இது, சாதநாபாசம் இன்னதென்கின்றது.

இதன்பொருள்: 'சாதநாபாசமாவது:—கீழ்ச்சொல்லப்பட்ட பக்கப்போலி ஏதுப்போலி திட்டாந்தப்போலிகளின் வாக்கியங்கள்' என்பது.

(53) ஆத்மப்ரத்யாயநார்த்தம் து ப்ரத்யக்ஷ
மநுமாநஞ்ச த்வே ஏவ ப்ரமாணே ॥

இது, ஸ்வார்த்தப்பிரமாணம் இவையென்கின்றது.

இதன்பொருள்: 'தனக்கு உணர்வு உதித்தற்பொருட்டுள்ள அளவைகள் காண்டலளவையும் கருத்தளவையும் (என) இரண்டேயாம்' என்பது.

(54) தத்ர ப்ரத்யக்ஷம் கல்பநாபோடம்
யஜ்ஞாநமர்த்தே ரூபாதௌ
நாமஜாத்யாதிகல்பநாரஹிதம் ।
ததக்ஷமக்ஷம் ப்ரதி வர்த்தத இதி ப்ரத்யக்ஷம் ॥

இது, பிரத்தியக்ஷம் இன்னதென்கின்றது.

இதன்பொருள்: 'அவற்றுள் காண்டல் கற்பனையின்றி யிருப்பது: எந்த அறிவு உருவமுதலியபொருளில் நாமம் சாதி முதலிய கற்பனையின்றி நிகழுமோ (அது). அது (கண்முதலிய) இந்திரியந்தோறும் நிகழ்தலால் காண்டல் எனப் பெயர்பெற்றது' என்பது.

[இதனுள், காண்டலளவை இன்னதெனச் சொல்லத்தொடங்கிக் காட்சியுணர்வைச்சொல்லியிருப்பது நியாயநூல்வழக்கோடு மாறுபட்டிருக்கிறது.]

(55) अनुमानं लिङ्गादर्थदर्शनम् ॥

இது, அநுமானம் இன்னதென்கின்றது.

இதன்பொருள்: 'அநுமானமாவது குறியால் துணிபொருளுணர்தல்' என்பது.

[இதனுள்ளும் அநுமிதியுணர்வை அநுமானமென்று சொல்லியிருப்பது நியாயநூன்மாறுபாடு.]

(56) लिङ्गं पुनस्त्रिरूपमुक्तम् ।
तस्माद्यदनुमेयेऽर्थे ज्ञानमुत्पद्यते अग्निरत्र
अनित्यः शब्द इति वा तदनुमानम् ॥

இது, லிங்கம் இன்னதென்றும் அதனாலுதிக்கும் உணர்வு அநுமானமென்றும் சொல்லுகிறது.

இதன்பொருள்: 'லிங்கம் (-குறி) மூன்றிலக்கணமுடையதாக முன்பு சொல்லப்பட்டது; அதனால், 'இங்கு நெருப்புள்ளது' என்றேனும் 'சத்தம் அநித்தம்' என்றேனும் அநுமேயப்பொருளில் யாதொருஞான முண்டாகுமோ அது அநுமானம்' என்பது.

[இங்கும் அநுமிதியுணர்வை அநுமானம் என்று சொல்லியிருப்பது நியாயநூல்வழக்கோடு மாறுபட்டது.]

(57) உபயத்ர ததேவ ஜ்ஞாநம் பலம் அதிகமரூபத்வாத் ॥

இது, பிரத்தியக்ஷமும் அனுமானமும் ஞானவடிவென்கிறது.

இதன்பொருள்: 'பிரத்தியக்ஷம் அனுமானம் என்னும் இரண்டு வகையிலும் அவ்வறிவே பயன்; அறிவுவடிவாதலால்' என்பது.

[இதுவும் ஆராயத்தக்கது.]

(58) ஸவ்யாபாரவத் க்யாதே: ப்ரமாணத்வமிதி ॥

இது, பிரமாணத்தன்மை இன்னதற்கென்கின்றது.

இதன்பொருள்: 'வியாபாரத்துடன்கூடியிருப்பதொன்றை விடயமாகவுடைய அறிவுக்குப் பிரமாணத்தன்மையுண்டு' என்பது.

[இதனுள், 'ஸவ்யாபாரவத்' என்றிருப்பது ஆராயத்தக்கது.]

(59) கல்பநாஜ்ஞாநம் அர்த்தாந்தரே ப்ரத்யக்ஷாபாஸம் ।
யஜ்ஞாநம் கட: பட இதி வா விகல்பயத:
ஸமுத்பத்யதே ததர்த்தஸ்வலக்ஷணா
விஷயத்வாத் ப்ரத்யக்ஷாபாஸம் ॥

இது, பிரத்தியக்ஷாபாசம் இன்னதென்கின்றது.

இதன்பொருள்: 'பிறிதொருபொருளிற் கற்பனையான அறிவு பிரத்தியக்ஷாபாசமாம்: எந்த அறிவு விகற்பிப்பவனுக்கு ஒரு பொருளில் குடமோ படமோ என்று உண்டாகுமோ (அது). அது பொருளின் உண்மைத்தன்மையைக் கவராமையால் பிரத்தியக்ஷாபாசமாயிற்று' என்பது.

[இது, பொய்யுணர்வின்பாற்படுவது.]

(60) हेत्वाभासबलाज्ज्ञानम् अनुमानाभासम्।
हेत्वाभासो हि बहुप्रकार उक्तः।
तस्माद्यदनुमेयेऽस्मिञ्ज्ञान-
मव्युत्पन्नस्य भवति तदनुमानाभासम्॥

இது, அநுமாநாபாசம் இன்னதென்கின்றது.

இதன்பொருள்: 'ஏதுப்போலியடியாகவரும் ஞானம் அநுமாநாபாசமாம். ஏதுப்போலியும் பலபடியாகச் சொல்லப்பட்டது; அதனால் அநுமேயப்பொருளில் யாதொரு ஞானம் நூலுணர்வில்லாதவனுக்கு உண்டாகிறதோ அது அநுமாநாபாசம்' என்பது.

[இதுவும் போய்புணர்வாவதல்லது அநுமாநாபாசமாகாது.]

(61) साधनदोषोद्भावनानि दूषणानि॥

இது, தூஷணம் இன்னதென்கின்றது.

இதன்பொருள்: 'சாதநக்குற்றங்களைத் தோற்றுவிக்கும் கூற்றுக்கள் தூஷணங்களெனப்படும்' என்பது.

[சாதநங்களாவன:—பக்ஷவசனமும் ஏதுவசனமும் திருஷ்டாந்தவசனமும்.]

(62) साधनदोषो न्यूनत्वम्।
पक्षदोषः प्रत्यक्षादिविरुद्धत्वम्।
हेतुदोषोऽसिद्धानैकान्तिकविरुद्धत्वम्।
दृष्टान्तदोषः साधनाद्यसिद्धत्वम्॥

இது, சாதநதோஷத்தின் வகைகூறுகின்றது.

இதன்பொருள்: 'சாதநக்குற்றம் (உறுப்பின்) குறை; பக்கக் குற்றம் பிரத்தியக்ஷமுதலியவற்றின் மாறுபாடு; [இது பிரத்தியக்ஷ

விருத்தத்தன்மை முதலியன என்றிருக்கவேண்டும்.] ஏதுக்குற்றம் அசித்தத்தன்மை, அநைகாந்திகத்தன்மை, விருத்தத்தன்மை ஆகிய இவை; திருஷ்டாந்தக்குற்றம் ஏதுமுதலியன சித்தியாமை' என்பது.

(63) தஸ்யோத்பாவநம் ப்ராஶ்நிகப்ரத்யாயநம் தூஷணம் ॥

இது, முன்புகூறப்பட்ட தூஷணத்தின் இலக்கணத்தை விளக்குகின்றது.

இதன்பொருள்: 'தூஷணமாவது சாதநத்தின்குற்றத்தை வினவுவோன் தெரிந்துகொள்ளும்படி வெளிப்படுத்தல் (-விளக்குதல்)' என்பது.

(64) அபூதஸாதநதோஷோத்பாவநாநி
தூஷணாபாஸாநி ॥

(1) ஸம்பூர்ணே ஸாதநே ந்யூநத்வவசநம் ।

(2) அதுஷ்டபக்ஷே பக்ஷதோஷவசநம் ।

(3) ஸித்தஹேதுகே அஸித்தஹேதுகம் வசநம் ।

(4) ஏகாந்தஹேதுகே அநைகாந்தஹேதுகம் வசநம் ।

(5) அவிருத்தஹேதுகே விருத்தஹேதுகம் வசநம் ।

(6) அதுஷ்டத்ருஷ்டாந்தே துஷ்டத்ருஷ்டாந்ததோஷவசநம் ।

ஏதாநி தூஷணாபாஸாநி ।

நஹ்யேபி: பரபக்ஷோ தூஷ்யதே ।

நிரவத்யத்வாத் தஸ்ய ॥ இத்யுபரம்யதே ॥

இது, தூஷணாபாசங்கள் இவையென்கின்றது.

இதன்பொருள்: 'தூஷணுபாசங்களாவன: இல்லாத சாதந தோஷங்களை ஏற்றிக்கூறும் கூற்றுக்கள். (அவை வருமாறு:—)

(1) குறையில்லாத சாதநங்களிற் குறை கூறுதல்,
(2) குற்றமற்ற பக்கவுறுப்பில் பக்கக்குற்றம் கூறுதல்,
(3) சித்தித்திருக்கும் ஏதுவை அசித்தவேது என்றல்,
(4) ஏகாந்த ஏதுவை அநேகாந்த ஏதுவென்றல்,
(5) விருத்தமாகாத ஏதுவை விருத்த ஏதுவென்றல்,
(6) குற்றமற்ற திருஷ்டாந்தத்தைக் குற்றமுள்ளதென்றல் (என்பனவாம்.)

இவை தூஷணுபாசங்கள்; இவற்ருல், பரபக்ஷம் குற்றமுள்ளதாகக் கொள்ளப்படாது; அப் பரபக்ஷத்தின்கண் குற்றமின்மையால். என்று இவ்வாறு முடிக்கப்படுகிறது (நூல்)' என்பது.

(65) 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤
𑌮𑌾𑌦𑍌 𑌦𑌿𑌙𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇।
𑌯𑌾 𑌤𑍁 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌾
𑌸𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌸𑍁𑌵𑌿𑌚𑌾𑌰𑌿𑌤𑌾॥

இது, நூன்முடிபு கூறுகின்றது.

இதன்பொருள்: 'முதலில் வழிமாத்திரம் தெரிவதற்காகப் பதப்பொருளளவே கூறப்பட்டது; இதனுள் பொருந்துதலும், பொருந்தாமையும் (அந்நுவயம் வியதிரேகம் என்பனவும், அசித்தம் அநைகாந்திகம் முதலியனவும்) வேறு நூலில் (பிரமாணசமுச்சயத்தில்) ஆராயப்பட்டிருக்கிறது' என்பது.

இவ்வாருக நியாயப்பிரவேசக சூத்திரம் முற்றுப்பெற்றது.

இனி நியாயப்பிரவேசத்திலில்லாதனவாய் மணிமேகலையிலுள்ள விடயங்கள் ஆராயப்படும்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

உ

இரண்டாம் இராஜாதிராஜன்.

[இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரைத் திரு. சோமசுந்தரதேசிகர் எழுதியது.]

(உகூகூ—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, சங்கரசோழனுலா என்ற நூலிலே—

"..—தெள்ளித்தம்
முன்னு யகரிலவன் மூதுலாக் கன்னிதொறும்
பொன்னு யிரஞ்சொரிந்த பூபதியு—மென்னுமிவர்
மாசக்ர மேரு வலஞ்சென் மகாசல
பூசக்ர மேழும் புரந்ததற்பின்—றேசம்
பணியு மநுகுலப் பாற்கட லீன்ற
மணியு மமுதமு மானக்—குணபா
லுவந்த வளவர் குலவசலத் துச்சி
நிவந்த பரிதி நிகர்ப்ப—அவந்திமன்
வங்கமன் கங்கம னுதித்தன் வந்தித்த
சங்கமன் றெல்லைத் தவம்போலப்—பங்கா
யெழுந்திகிரி வெற்பை யெனத்திகிரி யுந்தன்
செழுந்திகிரி யின்றிமிரந் தீர்ப்ப—மொழிந்தனைத்தும்
வல்லம னுதி மநுவினு மேதக்க
நல்லம னென்கின்ற நாயகற்கும்—தொல்லை
மலைக்குங் கடற்குநடு மண்முழுதுங் காத்துச்
சிலைக்கும்பா தாளத்தைச் சீறித்—தொலைத்துப்
பருந்து நிழற்பந்தர்ப் பல்லா யிரம்பேய்
விருந்து களிப்ப விடுத்துக்—கருந்தலையின்
குன்று குவித்துக் குவித்த பிணக்குவடு
சென்று குருதித் திரைமிதப்ப—வென்றதற்பின்
பூசற் குடகடற்கே போர்வாட் கறைகழுவித்
தேசத் தொழியாத் திறைகொண்டு—காசினிக்கே
பைத்த பொருபுலியைப் பல்கோடி வேந்தணிய
வைத்த குமார மகீதரற்கு-மெய்த்துணையாத்
தோற்றிய சங்க்ர ராசன் சுரராசன்
போற்றிய கங்கா புரராசன்"

என்று காணப்படுவதுகொண்டு இராஜராஜனுக்குப்பின் நல்லமன், குமாரமகீதரன் என்பவர்கள் அரசாண்டனர் என்ப. குமாரமகீதரன் யாவனென ஆராயுங்கால் அவனே மூன்ருங்குலோத்துங்கனுவான் என முடிவுகட்டடப்பட்டுளது. அம்முடிபும் மறுக்கமுடியாத தொன்றும். அன்றியும், இக்குலோத்துங்கன்மேற் பாடப்பட்ட கோவையிலே சங்கமராச குலோத்துங்கன் என்று பத்து இடங்களிலும், பொய்யாத சங்கமராச வரோதயன் என்று 29-வது செய்யுளிலும், சங்கமன்வாழ் குலோத்துங்கன் என்று 328-வது செய்யுளிலும் காணப்படுவதுகொண்டு உலாவிலே கூறப்பட்ட செய்தி உண்மையெனக் காண்போம்.

இஃதன்றி 64-வது செய்யுளிலே 'அகிலாண்டமெலாங்கோனுகுஞ் சங்கரன் முன்னேன் குலோத்துங்கன் கோழிவெற்பில்' என்று காணப்படுவதுகொண்டு சங்கரன் குலோத்துங்கன் இளவல் என்று உலாக் கூறியசெய்தி வலியுறுகின்றது. ஆகவே நல்லமன் குலோத்துங்கன்* சங்கரன் என்ற மூவரும் சங்கமனுடைய புதல்வர்கள் என்று அறியலாம்.

இவற்ருல், விக்கிரமசோழதேவர்பேரனுர் நெறியுடைப்பெருமாள்திருமகனுர் எதிரிலிப்பெருமாள் என்பதும், மேற்காட்டிய பெயர்களும் பொருந்துவதெங்ஙன்? என்ற வினு எழுவது இயல்பேயாம். இங்கு நெறியுடைப்பெருமாளுக்குச் சங்கமன் என்றெரு பெயரும், இராஜாதிராஜனுக்கு நல்லமன் என்ற மறுபெபரும்உண்டு என்று கொள்வதைத்தவிர வேறு வழியில்லை. ராஜராஜனுக்குப்பின் இராஜாதிராஜனும் குலோத்துங்கனும் அரசாண்டது பலவிதத்திலும் நிரூபிக்கப்படுதலாலே இவை மறுபெயர்கள் என்றே கொள்வது அமைவுடையது. ஆகவே, இராஜராஜனுக்குப்பின் ராஜராஜனுடைய அத்தைமகனுன நல்லமன் என்கின்ற

---

*குலோத்துங்கன் இராஜராஜன்மகன் என்பதே பலருடைய கொள்கை. இராஜராஜனுக்கு ஆண்மக்கள் இல்லை என்று கல்வெட்டுக்கொண்டு காட்டலாயிற்று. அதே கல்வெட்டில் பின்னரும் ராஜராஜதேவர் விருந்தங்களுக்கும் மக்களுக்கும் எட்டுவேலிநிலம் இறையிலியாக விடப்பட்டிருப்பதுகொண்டு அவனுக்கு ஆண்மகவில்லை என்பது உறுதியாம்.

எதிரிலிப்பெருமாள் கி. பி. 1163ல் தைமாதத்தில் அரசாட்சிக்கு வந்தான். அவனுக்குத்துணையாகக் குலோத்துங்கனும் சங்கரனும் வந்தார்கள்*. எதிரிலிப்பெருமாளுக்கு கி. பி. 1167ல் பட்டாபிஷேகம் நடந்தது. இவனுக்குப் பெருந்துணையாக இருந்தவர் திருச்சிற்றம்பல முடையான் பெருமான்நம்பி என்ற பல்லவராயர்† ஆவார்.

இராஜாதிராஜதேவர் அரசாட்சிபுரிந்துவருகையில் நாட்டிற் கலகமொன்றுமில்லை. வடக்குத்திசையைத் தொண்டைமண்டலத் திற் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக்கொண்டு செங்கேணி அம்மையப் பன் எதிரிலிச்சோழ சம்புவராயன் என்ற தளபதி பாதுகாத்துவந்தான். பாண்டிநாட்டிலே பாண்டியர்கள் சோழசக்கரவர்த்திக்கு உள் ளடங்கி அரசாட்சிசெய்துவந்தனர். அவ்வாறு நடந்துவருகையில் இராஜாதிராஜனுடைய அரசாட்சியில் உத்தேசம் நாலாம் ஆண்டில் பாண்டியவரசைக்குறித்துப் பராக்கிரமபாண்டியனுக்கும் குலசேகர பாண்டியனுக்கும் விவாதம் உண்டாயிற்று. பராக்கிரமபாண்டியன் இலங்கையை அக்காலத்திலே அரசாட்சிசெய்துகொண்டிருந்த பராக்கிரமபாகுவை உதவிசெய்யும்படி வேண்டினன். பராக்கிரம பாகுவும் அதற்கு உடன்பட்டு அந்த நாட்டிலே பெரியதளபதியாக விருந்த இலங்காபுரித் தண்டநாயகன்கீழ் ஒருபெருஞ்சேனையை அனுப்பினன். அந்தச்சேனை இலங்கையிலேயுள்ள மாதோட்டம் வருமுன்னரே குலசேகரபாண்டியன் பராக்கிரமபாண்டியனையும் அவனுடைய பெண்டுபிள்ளைகளையும் கொன்றுவிட்டான்.‡ ஆனல்

---

* இவர்கள் துணையாக வந்தனர் என்பதற்கு உலாவைத்தவிரப் பல்லவ ராயன்பேட்டைக் கல்வெட்டும் ஆதாரமாகிறது. அக்கல்வெட்டின் 11-வது வரியிலே கங்கைகொண்டசோழபுரத்திலே எழுந்தருளியிருக்கிற பிள்ளைகளைப் பிரயாணம்பண்ணுவித்து என்று காணப்படுகிறது. இத்தொடரினலே சகோதரர்கள் மூவரையும் அழைத்துவந்திருக்கவேண்டுமென்று கொள்ள லாம்.

† இவர் சிறந்த தளபதியாயிருந்ததோடு இராஜராஜனுக்கு நெருங்கிய உறவினராகவுமிருந்தனர் என்று தெரிகிறது. இவர் தக்கயாகப்பரணியிற் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

‡ மகாவமிசம் அதி. 76, 77.

பராக்கிரமபாண்டியனுடைய பிள்ளைகளில் ஒருவனான வீரபாண்டியன்மட்டும் சேரநாட்டுக்கு ஓடிவிட்டான்.

இலங்காபுரித் தண்டநாயகன் இச்செய்தியைக் கேட்டானாயினும், அங்கிருந்து கடலைத்தாண்டி இராமேசுரம்முதலான ஊர்களைப்பிடித்துக்கொண்டு மதுரைநோக்கிவந்தான். குலசேகரனும் பெருஞ்சேனையுடன் பாண்டியராஜன் சுந்தரபாண்டியன் என்ற தளபதிகளையும் அனுப்பினான். அவர்கள் தோல்வியடையவே ஆளவந்தான் என்றமற்றொரு தளபதியை அனுப்பினான். அவன் போரில் மடிந்தான். இலங்காபுரியின் உதவிக்குச் சிங்களவரசனான பராக்கிரமபாஹு பின்னுமொரு சேனையைத் திரட்டி ஜேகத்திரயதண்டநாயகன்வசம் அனுப்பினான். இருசேனையும் கலந்து பாண்டிநாட்டிலே பெரும்பகுதியைப் பிடித்துக்கொண்டு குலசேகரனை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டன. இலங்காபுரித் தண்டநாயகன் மலையாளத்தில் ஓடியொளித்திருந்த வீரபாண்டியனை அழைத்துப் பாண்டிநாட்டுக்கரசனாக்கினன்.

தோற்று ஓடின குலசேகரனே சோழநாடுசென்று தனது பேரரசனான இராஜாதிராஜனிடம் முறையிட்டுநின்றான். அதனைக் கேட்ட இராஜாதிராஜன் தனது சாமந்தனும் தளபதியுமான திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பியான பல்லவராயரைப் பார்த்து,

14 *'ஈழத்தான் பாண்டியநாட்டிலே படைகளும் காரணவர் ஆனரையும் மிகுதிப்படவிட்டு இந்நாடு கைக்கொள்ளக்கடவனாகப்பண்ணின இடத்து பாண்டியனார் குலசேகரதேவர்

15 தம்முடைய ராஜ்யம்விட்டுச் சோழராஜ்யத்திலே புகுந்து "என்னுடைய ராஜ்யம் நான் பெறும்படி பண்ணவேணுமென்று சொல்ல" இவர்† உடையார் [குலசேகரதே]வர் பெறும்படி பண்ணக்கட

16 வாராகவும்[;] இந்த ராஜ்யத்திலே புகுந்து வந்து கைக்கொண்ட இலங்காபுரித்தண்டநாயகன் உள்ளிட்டாரைக் கொன்று பாண்டியர் இ

---

* 433 of 1924. பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு.

† இவர் என்றது பல்லவராயரை.

17 ருப்பான மதுரைவாசலிலே இவர்கள் தலைதைப்பிக்கக்கடவராகவுஞ் சொல்லி இப்படியெல்லாம் விண்ணப்பஞ்செய்து திருவுள்ளமான படியே பாண்டியனுர் குலசேகரதேவர் சோழராஜ்யத்தில் இருந்த நாளில் இவர்க்கு வே

18 ண்டுவனவெல்லாம் குறைவறச்செய்து'

வருமாறு கட்டளையிட்டான். பல்லவராயனும் பெருஞ்சேனையோடு சென்று இலங்காபுரியோடு போர்புரிந்தான். ஆயினும், உடனே பல்லவராயன் தான் சொல்லிவந்தபடி ஈழப்படையை வெருட்டிவிட முடியவில்லை. சிலபல போர்களிட்டபிறகே முடிந்தது. இப்போரில் சோழர்களும் அஞ்சவேண்டியிருந்த தென்பது ஆரப்பாக்கத்துக் கல்வெட்டால் விளங்குகிறது. அது வருமாறு:—

(1-8)'ஸ்வஸ்திஸ்ரீ [1] ஈணவ தயெ நஜஃ கடல் சூழ்ந்தபார்மாதரும்[2]......... (9)கோப்பரகேசரிபத்மரான திரிஹுவநசுகூவதிகள் ஸ்ரீ ராஜாயி(10)ராஜதெவற்கு யாண்டு ரு-வது ஈழப்படை பாண்டி மண்ட(11)லத்தைக் கைக்கொண்டு மதுரையிலேயிருந்த ராஜா கூலஶெ(12)வரதெநப் போகத்துரத்திப் பின்பு ஶஹாராஜா ஸ்ரீராஜாயிராஜதெ(13)வர் ஸாமீந்தரொடே பூசல்பொரத் துடங்கி தொண்டி பாசி ஹூதெஶ(14)த்திலே பூசலுண்டாய் சுவடாயத்திலே ஈழப்படை ஜயித்த (15)வாறே சோழமண்டலத்திலும் மற்றுள்ள நாட்டுக்களிலுமுள்(16)ள ஜனங்களெல்லாம் பயப்பட்டமையைக் கேட்டு எதிரிலி(17)சோழச்சம்புவராயநேந் இதக்கு [3] இது எங்ஙனேயாமோவென்று விசா(18)ரந்தோன்றி ஸ்வாமிதேவர்[4] ஸ்ரீவாதத்தேறச்சென்று இப்படிபுகுந்த(19)து ஈழப்படையாகிற சாலப்பாபகர்மாக்கள்; அவர்கள் சோழமண்ட(20)லத் தெல்லையிலே புகுதில் ஸ்ரீமஹாதேவர்கோயிலுள்ளிட்ட தேவர்கள்

---

[1] தென்இந்தியக்கல்வெட்டுக்கள் தொகுதி vi நிர் 456.

[2] மெய்க்கீர்த்தி கொடுக்கவில்லை.

[3] எதிரிலிசோழசம்புவராயனேன் எனக்கு என்று வாசிக்க,

[4] ஸ்வாமிதேவர் அரசனுடைய ஆசார்யர்,

கோயிலுக்கும் பிராமணர்க்கும் ராஷ்டிரத்துக்கும் மடங்க விரோத முண்டாம். இதுக்குப் பரிகாரமாக ஜபஹோமார்ச்சனங்களால் எல்லாப் படியாலும் அநுஷ்டிரமதம் பண்ணியருளவேணுமென்று விண்ணப்பஞ் செய்ய தேவர்செய்தருளுகிறார்;'ஈழப்படையாகிற இது சாலபாபிஷ்ட்ரு மாய் துர்ச்சனருமாய் திருவிராமீஸ்வரத்தில் தேவர்கோயிலைத் திருக் காப்புக்கொண்டு பூஜை முட்டப்பண்ணி அங்குள்ள ஸ்ரீபண்டாரமெல் லாம் கைக்கொண்டு சிவதுரோஹிகளென்னுமிடம் அறிந்தோம். அவர் கள் பூசலிலே அறப்பட்டு துரப்புண்டுபோம்படிக்கு அதிருஷ்டமுகத் தாலே வேண்டும் யத்னம் பண்ணுகிறோம்' என்றருளிச்செய்து இருபத் தெட்டுநாள் அகோரஸூபூஜை பண்ணியருளினார்[;] இதற்குப்பின்பு பிள்ளைபல்லவராயர்பாடுநின்றும் எனக்கு ஓலைகொண்டு தூதர் வந் தார்கள். அதில் ஜயத்ரததண்டநாயக்கனும் லங்காபுரித்தண்டநாயக்க னும் உள்ளிட்ட பிரதானிகளும் படையும் மடங்கப்பட்டு ஓடிப்போச் சுது என்று சொல்லிவந்தது.'

இந்தப்படி பிள்ளைபல்லவராயனிடமிருந்து ஜகத்ரய தண்ட நாயகன் லங்காபுரித்தண்டநாயகன்முதலிய பலரும் முறிய அடிக்கப் பட்டு ஓடிவிட்டார்கள் என்று எதிரிலிச்சோழசம்புவராயனுக்கு ஓலை வந்தது. பல்லவராயனும் தான் சோழசக்கரவர்த்தியிடம் சொல்லிவந்தபடியே,—

18 பரிகரித்து[1] பலத்தாலும் அர்த்தத்தாலும் உற்சாகத்தாலும் பாண்டி நாடு கைக்கொண்டு தாஞ்சொன்னபடியே இலங்காபுரிதண்டநாயகன் உள்ளிட்டாரைக்கொன்று இவர்கள் தலை

19 மதுரைவாசலிலே தைப்பித்து பாண்டியனார் குலசேகரதேவர் மதுரை யிலே புகுகைக்குச் செய்யவேண்டுவனவும் பாண்[டியராஜ்ய]த்துச் செய்வித்து இவரை மதுரையிலே புகவிட்டு பாண்டிநாடு ஈழநாடு ஆகாத

20 படி பரிக்கிரகித்துச் சோழராஜ்யம் சென்றபடிக்கு ஈடாகத் தொண்டைநாடும் பாண்டிநாடும் செல்லும்படியும் பண்ணி ராஜகாரியங் கொண்டு நிர்வகிக்கக்கடவமானதற்குத் தான் கட்டளையிட்டுக் காரியங் கொண்டுசெலுத்தினபடியே தமக்குப்பி

---

1 433 of 24.

21 ன்பும் இகட்டளையிலே காரியஞ் செல்வதொருபடி காரியங்கொண்டு செல்வதாநிற்க இவர் வியாதிப்பட்டு இன்றியே ஒழிந்தார்.

பாண்டியன் குலசேகரனும் அரசாண்டுகொண்டிருந்தான். இவ்வாறுநடந்தது ராஜாதிராஜதேவருடைய ஐந்தாமாண்டென்ப. அது கி. பி. 1168 ஆகும்.* பிள்ளைப்பல்லவராயன் இறந்தபின்னர் மேன்மலைப் பழயனூர் உடையான் வேதவனமுடையான் மகா சாமந்தனுகவும் தளபதியாகவும் நியமிக்கப்பட்டான். இச்செய்தி, பல்லவராயன்பேட்டைக்கல்வெட்டு 23 வது வரியில், "'இந்நிலம் அநுபவிக்கும்படி ஜயங்கொண்டசோழமண்டலத்து மேன்மலைப் பழையனூர்நாட்டுப் பழையனூருடையான் வேதவனமுடையான் அம்மையப்பனுரான பல்லவராயன் நிச்சயித்தபடி' பிள்ளைப் பல்லவராயனுடையநிலம் 'கொறுக்கைநாட்டு இவர்காணியான சோளேந்திரசிங்கநல்லூரில் பழம்பெயர்தவிர்ந்து யாண்டு எட்டாவதுமுதல் அந்தராயம் பாட்டமுட்பட இறையிலியாய் வேறுபிரிந்த இராஜராஜன்குளத்தூர்†நிலம் நாற்பதிற்றுவேலியும்' பிள்ளைப்பல்லவராயனுடைய விருந்தங்களுக்கும் மக்களுக்கும் இராஜராஜனுடைய விருந்தங்களுக்கும் மக்களுக்கும் பங்கிடப் பட்டது" என்று காணப்படுதலால் அறிகின்ருேம்.

வேதவனமுடையானுன அம்மையப்பன் அண்ணன் பல்லவ ராயன் என்ற பட்டமும் பெற்ருன்.

இந்தக்காலத்தில் இலங்கையிலே ஆண்டவன் பராக்கிரம பாஹு என்று முன்பு கூறலாயிற்று. விஜயபாஹு ஜயபாஹு என்ற அரசர்களின் சகோதரியான மித்தை என்பவள் பாண்டிய ஞெருவனை மணந்து மாஞபரணன், கீர்த்தி ஸ்ரீமேகன், ஸ்ரீவல்லபன் என்ற மூன்றுபிள்ளைகளைப்பெற்ருள். முன்னவனுன மாஞபரணன், கி. பி. 1065முதல் 1120வரை இலங்கையில் ஒருபகுதியை

---

* இந்தஆண்டு ஆரப்பாக்கத்துக் கல்வெட்டால் தெரிகிறது. ஸ்வாமி தேவருக்கு ஐந்தாம் ஆண்டில் ஆரப்பாக்கத்தைச் சம்புவராயன் தானம் கொடுத்தனன்.

† குளத்தூர், அட்டவீரட்டங்களுள் ஒன்ருனதும் மாயூரந்தாலூகாவிலுள்ளதுமான கொறுக்கைக்குத் தென்கீழ்பால் ஒருகட்டைக்குள் உள்ளது.

ஆண்ட முதல் விஜயபாஹுவின் மகளான இரத்தினவளியை மணந்து பராக்கிரமபாஹுவைப் பெற்றான். இந்தப் பராக்கிரம பாஹுவே இங்குக் கூறப்பட்டவன். இவனுடைய சிற்றப்பன் ஸ்ரீவல்லபனுடைய மகனான மானாபரணன் ரோகனநாட்டை ஆண்டுகொண்டிருந்தான். சிங்களத்தில் ஒருபகுதியையாண்ட கஜபாஹு இறந்ததும் அவனுடைய நாட்டை யாள அந்நாட்டு மக்கள் மானாபரணனையழைத்தனர். அவனும் தனதான ரோகன நாட்டைவிட்டு அநுராதபுரம் வந்தான். ஆனால் பராக்கிரம பாஹுவோ பெருஞ்சேனையோடுவந்து எதிரிகளைவென்று சிங்கா தனத்தைக் கைப்பற்றிக்கொண்டான். ஆனால் நாட்டிற் கலக முண்டாயிற்று. அதற்கு மானாபரணனும் உதவியாகவிருந்தான். இடையில் மானாபரணன் இறந்தான். அவனுடையமனைவி (ஜயபா குவின் பேத்தியான) சுகலா என்பாள் கலகத்தை மேற்கொண்டு நடத்தினாள். இதனைப் பராக்கிரமபாஹு தீவிரமாகநின்று தொலைத் தான். சுகலா இறந்தாள். அவள்புதல்வனான ஸ்ரீவல்லபன் சோழ நாட்டில் அடைக்கலம்புகுந்தான்.[1]

இதற்குப்பின்னரே முன்னர்க்கூறிய பாண்டிய அரசுரிமைப் போர் நடந்தது. அதில் சிங்களவர் தோற்றதுமன்றித் தங்கள் தலைமைத்தளபதிகள் இருவரை யிழந்து அவமானப்பட்டதும் பராக்கிரமபாஹுவுக்குச் சகிக்கவில்லை. அவன் உடனே சோழ நாட்டையெதிர்க்க ஒரு பெருஞ்சேனையையும் பல நாவாய்களையும் திரட்டி மாதோட்டம் ஊரத்துறை, மட்டிவாள் முதலான இடங் களில் நிறுத்தினான். இது கி. பி. 1173, 1174-ஆக இருக்கலாம்.[2]

இராஜாதிராஜன் ஜயங்கொண்டசோழமண்டலத்து மேன்மலைப் பழையனூர்நாட்டுப் பழையனூருடையான் வேதவனமுடையான் அம்மையப்பனான அண்ணன் பல்லவராயனைப் பார்த்து,

---

[1] இலங்கைச்சரிதம்.

[2] ராஜாதிராஜனுடைய 12-ம் ஆண்டு 157-ம் நாளில் அண்ணன் பல்லவ ராயன் காவிரிநாட்டுப் பழையனூரை முற்றூட்டாகப்பெற்றனன். அதற்கு முன்னரே இந்தப் போரெல்லாம் முடிந்துவிட்டன.

'ஈழத்தான் [1] பராக்கிரமபாஹு ஆழ்வான் போதே தொடங்கி சோழராஜ்யத் துக்கு விரோதமாயிருப்பன பலவடிகளாலும் செய்யப்பார்த்து, இது உறுப்பாகப் பாண்டிநாட்டிலே படை ஊரவிட்டு [காரணவரான] குலசேகரனையும் மதுரையில் நின்றும் வெள்ளாற்றுக்கு வடகரையிலே போதப்பண்ணினபடியாலே, வினைக்கேடுகளும் செய்யப்பார்த்த இடத்து இதுக்குப் பரிகாரமாக குலசேகரர்க்கு வேண்டுவனவுஞ் செய்து முதலிகளும் படைகளும் போகவிட்டு ஈழத்தான் படையையும் இப்படைக்குக் காரணவரான லங்காபுரித்தண்டநாயகனும் ஜகத்ரத தண்டநாயகனும் உள்ளிட்டாரையும் கொன்று மதுரைவாசலிலே இவர்கள் தலைகளைத் தைப்பித்து யிவ்வூரிலே குலசேகரனையும் புகவிட்டு' முன்னர் திருச்சிற்றம்பலமுடையான் செய்தான்.[2] இப்பொழுது பராக்கிரமபாஹு ['இவைகளுக்]கு விரோதமாயிருப்பன செய்யப் பார்த்து இவன் தன் படைநிலையான ஊராத்துறை, புலைச்சேரி, மாதோட்டம், வல்லிகாமம், மட்டிவாள் உள்ளிட்ட ஊர்களிலே படைகளும் புகுதவிட்டு படகுகளும் ஜீவிக்கிறபடிகேட்'கிரும். இதுக்குப் பரிகாரமாக ஈழத்தான் மருமகனுராய் ஈழராஜ்யத்துக்குங் கடவாராய் முன்பேபோந்திருந்த ஸ்ரீவல்லபரை யழைப்பித்து இவர்க்கு வேண்டுவனவுஞ்செய்து இவருடனே வேண்டும் படைகளும் ஊராத்துறை, வல்லிகாமம், மட்டிவாள் உள்ளிட்ட ஊர்களிலே புகவிட்டுப் புலைச்சேரி, மாதோட்டம், உள்ளிட்ட ஊர்களும் அழித்துவரவேண்டும் என்று கட்டளையிட்டார். வேதவனமுடையானும் அவ்வாறே சென்று, 'புலைச்சேரி மாதோட்டம் உள்ளிட்ட ஊர்களும் அழித்து ஈழத்தானின வாய் இவ்வூர்களிலும் நின்ற ஆனைகளும் கொண்டு ஈழமண்டலத்தில் கிழமேல் இருபதின்காத மேற்படவும் தென்வடல் முப்பதின்காத மேற்படவும் அழித்துத் துறையில் இவன் மனிச்சராயிருந்தாரில் கொல்வாரையுங் கொன்று பிடிப்பாரையும் பிடித்த இவர்களையும் சரக்காய்க் கைக்கொண்டனவும் பிடித்த ஆனைகளும் அழைப்பித்து'

---

[1] 465 of 1905.

[2] பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டிற் கண்டசெய்தியே இந்தக் கல்வெட்டிலும் கூறப்பட்டுள்ளது.

இராஜாதிராஜன்முன் காணிக்கையாகச் செலுத்தினுன். இவ்வாருக ஈழத்தானுன பராக்கிரமபாஹுவை யடக்கினுன். இந்தச் செய்தி மஹாவமிசத்தில் கூறப்படாவிடினும் திருவாலங்காடு, திருமெய்ஞ் ஞானம் கல்வெட்டுக்களால் நன்கு புலனுகின்றது.

ஆயினும், பராக்கிரமபாஹு சும்மா இருந்ததாகத் தெரிய வில்லை. அவன் பாண்டிய அரசனுகவிருந்த குலசேரனைத் தூண்டி அவனுடன் சம்பந்தம்பண்ணி மந்தணமாகக் கடிதப்போக்குவரத் தும் வைத்துக்கொண்டான். மேலும் இவன் அக்காலத்திற் சிங் களப்படை பாண்டிநாட்டுக்கு வாராதபடி காவலாகவைத்திருந்த சேனையோடு 'பாண்டிநாட்டு எழகத்தூரிலும் மற்றச் சாமந்தரிலும் நமக்குச் (சக்கரவர்த்திக்கு)ச் செறுவுபட்டுநின்று உடன்செய்கிற இராஜராஜகார்குடியராயனும் ராஜகம்பீரஅஞ்சுகோட்டைநாடாள் வானும் உள்ளிட்டாரை அத்துறைகளினின்றும் வெள்ளாற்றுக்கு வடகரையிலே போதப்பண்ணி'ஞன். இஃதன்றி குலசேகரன் 'இலங்காபுரித் தண்டநாயகனும் ஜகத்ரயதண்டநாயகனும் உள் ளிட்டார் தலைகளாய் மதுரைவாசலிற் றைச்சதலைகளும் வாங்கிப் போகவிட்டு எல்லாத்தீமைகளும் செய்து' வந்தான். மேலும் 'ஈழத் தான் குலசேகரருடன்கூடநின்று உதவிசெய்கைசுட்டி இவ ருடன் சார்வுபட்டு நின்ருர்க்கு வரக்காட்டின ஓலைகளும் வஸ்துக் களும் வழியிலே இவரிடம் அகப்பட்டன. ஆதலிஞலே குலசேகர தேவரைப் பாண்டிநாட்டினின்றும் போக்கி முன்பேபிடித்து மது ரைக்குக் காரணவரான பராக்கிரமபாண்டியனுர்மகனுர் வீரபாண் டியதேவரை' அரசுகட்டிலேற்ற ராஜாதிராஜதேவர் உத்திரவிட் டார். வேதவனமுடையானும் வஸ்துவாலும் குதிரையாலும் வேண்டுவனகொண்டு 'நேருடன் செய்தி சுருக்கின நாளையிலே வீர பாண்டியதேவரை மதுரையில் புக' விட்டான்.

இவ்வாறே குலசேகரனை நாட்டினின்றும் அப்புறப்படுத்தி வீரபாண்டியனை மதுரையில் புகவிட்டது இராஜாதிராஜனுடைய

ஆட்சியில் பன்னிரண்டாமாண்டில் ஆகும். அது கி. பி 1175 ஆகின்றது.

இதன்பின்னர் இவனுடைய அரசாட்சியில் ஒருவிதமான துன்பமும் இருந்ததாகத் தெரியவில்லை. இவன் கோனேரின்மை கொண்டான் என்ற பட்டமுடையவனாக இருந்தானென்பது, கல்வெட்டுக்களால் அறியும் செய்தியாம். இவனுடைய பட்டமகிஷி உலகுடைமுக்கோக்கிழானடிகள் எனப்படுவாள். இவருடைய ஆளுகையின்போது திருவொற்றியூரிலே 'படம்பக்கநாயகதேவர் திருமகிழின்கீழ்த் திருவோலக்கஞ்செய்து எழுந்தருளியிருந்து ஆளுடையநம்பி ஸ்ரீபுராணம் கேட்டருளும்' வழக்கம் இருந்தது*. இதனைச் சேக்கிழாரடிகளது பெரியபுராணத்தை அரசனேகேட்டனன் என்று பிறழ்வாகக்கொண்டு சிலர்கூறுவர். அதற்குக் கல்வெட்டில் போதிய ஆதாரமில்லை. ஆயினும், அன்றுதொட்டு இன்றுவரை பிரமாலயம் தேவாலயங்களில் திருவிழாக்கள் ஒரு படியாகவே நடைபெறுகின்றன வென்பதைத் தெளிவாக அறிகின்றோம்.

இவ்வாறாக இவர் கி. பி. 1178-ம் ஆண்டு ஆடிமாதம்வரை ஆண்டு சிவபெருமானது திருவடிநீழலையடைந்தார்.

---

* S. I. I. V, 1358. இந்த வழக்கம் இன்றும் நடைபெறுகிறது. இதனை மகிழடிசேவையென்பர்.

உ

சென்னைப் பல்கலைக் கழகத்துக் கமிஷனர்களான

மாட்சிமைதங்கிய

ரெங்கநாதனவர்கள்

குன்னன்ராஜா அவர்கள்

வையாபுரிப்பிள்ளையவர்கள்

ஆகிய மூவரும் தாதுஸு ஆவணித்திங்கள் 26உ (10—9—36)

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கு விஜயம்செய்தபோது

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் படித்துக்கொடுத்த

வரவேற்புப்பத்திரம்.

திருவளர் நலமலி செந்தமிழ் நாட்டில்
சென்னை மாகாணப் பல்கலைக் கழகத்து
ஆங்கிலம் ஆரியம் அருந்தமிழ் மொழிகளைப்
பாங்குறப் பயிற்றிப் படிமிசை வளர்க்கும்
மூவி ராகும் ஒருபெருந் தகையீர்
வெள்ளியும் வியாழனும் புதனும் போல
ஒள்ளிய புலமை யுடையீர் வருக!
ரேங்க நாத நெடியோய் வருக!
குன்னன் ராஜா குணநிதி வருக!
எய்யா நல்லிசை வையா புரிப்பெயர்
ஐயா வருக அனைவிரும் வருக!
நுங்கள் வருகை நல்வர வாகுக!
எங்கள் கவலை இனியொழிந் திடுக!
ஆரியம் தமிழெனும் ஆயிரு மொழியும்
தந்தையும் தாயும் நந்தமக் கெனவே
அன்னவர் நிலைமை காண்பான் வந்தீர்
தாயையும் தனியே காண்டல் தகுமென
ஈங்குவந் துவந்த விம்மூ வீரும்
பாங்குறப் பல்கலை படிமிசை விளக்கிப்
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க
எல்லா நலனும் இனிதொருங் கிசைந்தே.

பாண்டியர் வரலாறு.

[உகஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

வரகுணராம குலசேகரபாண்டியன்:— கி. பி. 1613ல் முடி சூட்டப்பெற்ற இவ்வேந்தன் முன்னவர்களுக்கு யாது முறையுடையான் என்பது தெரியவில்லை. இவன் வேதவிதிப்படி வேள்வி புரிந்தவன்: இதுபற்றியே இவன் குலசேகரசோமாசியார் என்று வழங்கப்பெற்றமை குறித்தற்குரியதாகும்[1]. கி. பி. 1748ல் இருந்த மற்றொரு பாண்டியன், இவனைப்போலவே வரகுணராமபாண்டிய குலசேகரதேவதீட்சிதர் என்று தன்னைச் சிறப்பித்துக்கொண்டமை ஈண்டு உணரற்பாலது[2]. ஆகவே, பிற்காலப்பாண்டியர்களுள் சிலர் சோமாசியார், தீட்சிதர் என்ற பட்டங்கள் புனைந்துகொண்டு அவற்றால் தம்மைப் பெருமைப்படுத்திக்கொள்ளவிரும்பினர் என்பது வெளியாதல் காண்க.

இக்காலப்பகுதியில் வாழ்ந்த பாண்டியர்களுள் பெரும்பாலோர் விசயநகரவேந்தர்கட்குக் கப்பஞ்செலுத்திவந்த குறுநில மன்னரேயாவர். இங்ஙனம் குறுநிலமன்னராயிருந்த பாண்டியர் இறுதியில் ஜமீன்தார்நிலையை எய்தித் தென்பாண்டிநாட்டில் ஓர் ஊரில் இருந்துவருவாராயினர்.

நம் தமிழகத்தின் தென்பகுதி தம்பெயரால் என்றும் நின்று நிலவுமாறு சரித்திரகாலத்திற்குமுன்தொடங்கிப் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையில் அங்கு ஆட்சிபுரிந்துவந்த தமிழ் வேந்தர்களான பாண்டியர்கள் தம்நாட்டை இழந்து சிறுமையுற்றுச் சீர்குலைந்தமை காலவேறுபாட்டினால் நிகழ்ந்த மாறுதலேயாம். ஆயினும், அவர்களுடைய மாரியன்ன வரையாவண்மையால் வெளிவந்துள்ள எடுப்பும் இணையுமற்ற தமிழ்நூல்கள் நம்மனோர்பண்டைப்பெருமையினை எந்நாட்டினர்க்கும் அறிவுறுத்தும் அரும்பெருநிதியமாகவும் அறிவுச்சுடர்கொளுத்தி நமது அகவிருள்போக்கும் செஞ்ஞாயிறாகவும் அமைந்து அன்னோரை நினைவுகூர்தற்கு ஏற்ற கருவிகளாக நிலைபெற்றிருப்பது மகிழ்தற்குரியதாகும்.

T. V. சதாசிவபண்டாரத்தார்.

---

[1] Travancore Archaeological Series Vol. I. page 148.

[2] Do Do 149.

1936-ஹு செப்டம்பர்மீ 17உ (தாது-ஹு புரட்டாசிமீ 2உ)
மாலை 6-மணிக்கு, தல்லாகுளத்தில்
இராமநாதபுரம்மஹாராஜாஅவர்கள் பங்களாவில் கூடிய
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில்
முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முகராஜேசுவர நாகநாதஸேதுபதிமஹாராஜா அவர்கள்,–அக்கிராசனாதிபதி.
2. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L., M.L.C., —உப-அக்கிராசனாதிபதி.
3. ,, V. சுந்தரமையரவர்கள் B.A., B.L.
4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I 1936-ஆம்ஹு எப்ரல்மீ முதல் ஆகஸ்டுமீ முடிய உள்ள வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய சென்னை யூனிவர்ஸிடி தமிழ்ரீடர் மகா-ா-ா-ஸ்ரீ S. வையாபுரிப்பிள்ளை B. A., B. L. அவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III மதுரை M. R. C. C. Bankல் Fixed Depositல் போட்டுக்காலவரையறைகடந்த ரூ 1050 யும் மறுபடியும் இரண்டு வருஷங்கட்கு ஷை பாங்கிலேயே Fixed Depositல் வட்டிக்குப்போட்டுவைக்கலாமென்றும், தேவகோட்டை வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ T. V. கிருஷ்ணையங்கார் B. A. B. L., அவர்கள் உதவியுள்ள மூலதனம் ரூ 1001யும் ஷைபாங்கிலேயே Fixed Depositல் இரண்டுவருஷங்கட்குப் போட்டுவைக்கலாமென்றும் சங்கத்தின் கௌரவகாரியதரிசிகள் எழுதிய மெமோ அங்கீகரிக்கலாயிற்று.

IV சங்கக்கலாசாலை மாணவர் போஷணைவகைக்கு உதவியுள்ள கனவான்களின் மாதச்சந்தாத்தொகையை வந்தனத்துடன் அங்கீகரிக்கலாயிற்று.

V தேவகோட்டை வக்கீல் மகா–ா–ா–ஸ்ரீ T. V. கிருஷ்ணையங்கார் B. A. B. L., அவர்கள் கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி சங்கம் ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷையில் பி.ஏ. வகுப்பு 2-வது பரிசை ஸ்ரீமாந். டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள்போல் தங்கமெடலாக அளிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*
17—9—36. அக்கிராசனாதிபதி.

உ

ரமாமணி.

[௲கஉ-ஆம்பக்கத் தொடர்ச்சி]

ஏழாம் அதிகாரம்.

தேடுதலில்.

And the Great lord of Luna
Till at that deadly stroke
As falls on mount Alvernns
A thunder-smitten oak.

Lays of Ancient Rome.

[மலையின்மேல் இடி விழுந்து, பெரிய தேக்குமரம் விழும் வரை, பெரியோனை சந்திரப்பிரபு காத்திருந்தான்.]

வீட்டுக்குள் எங்குந்தேடிக் கத்தியையாவது சுந்தரியையாவது காணமல், சந்தேகமடைந்த மனத்துடன் காபாலிகன் மணல்மேட்டுக்குத் திரும்பிவந்தான். அங்கே மணிராஜனை அவன் காணமல் சிதைக்கப்பட்டவையான கொடித்துண்டுகளைக் கண்டான். அப்பொழுதுதான், மணிராஜன் ஓடிவிட்டானென்று அவனுக்குத் தெரிந்தது. உடனே அவனைத் தேடுவதற்காகக் காபாலிகன் ஓட்டமெடுத்தான். ஜனமேயில்லாத அக்காட்டில், தேடுவது மிகவும் கடினம். மேலும் இருள் மூடிவிட்டதால், ஒரு வஸ்துவும் அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. ஏதாவது சத்தம் காதில் விழுமோவென அவன் அங்குமிங்கும் சுற்றினன். யாதொன்றும் காதில் விழவில்லை. நான்குபக்கங்களிலும் பார்க்கலாமென்று ஒரு மணற்குன்றின்மேல் ஏறி, அவன் மேட்டின் ஒருபக்கமாகச் சென்றுன். குன்றின் அடிப்பாகம் மழையினுல் அரிக்கப்பட்டுப்போயிருந்ததை அவன் அறியான். அவனது சரீரத்தின் கனத்தால் அக்குன்று 'திடீர்' என்று சரிந்துவிழுந்தது. காபாலிகனும் பூமியில் விழுந்தான். அவன் கீழேவிழுந்தது, மலைமேலிருந்து ஒரு பெரிய எருமைக்கடா விழுந்ததுபோல் இருந்தது.

எட்டாம் அதிகாரம்

சுந்தரியின் ஆசிரயத்தில்.

And that very night
Shall Romeo bear thee to Mantua (Romeo & Juliet.)

[அன்று ராத்திரியே "ரோமியோ"வானவன் உன்னை "மஞ்சுவா"வுக்குக் கூட்டிப்போவான்.]

அமாவாசையின் இந்த நெருங்கிய இருட்டில் இருவர் பெருமூச்செறிய வனத்தில் பிரவேசித்தார்கள். மணிராஜனுக்குக் காட்டுவழி பழக்கப்பட்டதில்லை. முன்செல்லுகிற அந்தப்பெண் மணியைக் குறிக்கொண்டு, அவளையே பின்தொடர்ந்துபோய்க் கொண்டிருந்தான். காபாலிகன் ஒருகால் வந்துவிடுவானோவென, அடிக்கடி அவன் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றான். அந்தப்பெண்ணோ கிரமமாகத் தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டாள். கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. எங்கேயோ ஓரிடத்தில் மின்மினிப்பூச்சிகளின் வெளிச்சத்தால், ஒரு மரத்தின் கிளைகள் புலப்பட்டன.

சுந்தரி மணிராஜனை நெருங்கியதோர் ஆரணியத்தின் நடுவில் அழைத்துக்கொண்டுபோனாள். அப்பொழுது இரவில் இரண்டாவதுயாமம் நிகழ்ந்தது. அவ்விருளில் ஒரு கோவிலின் சிகரம் காணப்பெற்றது. அக்கோயிலின் சமீபத்தில் செங்கல்லாற் கட்டப்பட்ட ஒரு வீடும் இருந்தது. அந்த வீட்டின்வாசலிற் கதவின் அண்மையில் சுந்தரி நின்றுகொண்டு கையினால் கதவைத் தட்டினாள். உள்ளேயிருந்து ஒரு மனிதன் யார்? சுந்தரியா? என வினவினான். சுந்தரி "ஆம்" என்று பதில்சொல்லிக் கதவைத் திறக்கச் சொன்னாள்.

கதவு திறக்கப்பெற்றது. உள்ளேயிருந்து, கதவைத்திறந்த மனிதன், அந்தக்கோவில் பூஜைசெய்கிறவனும் அதிகாரியுமாவான். அவன் வயது ஐம்பதைக் கடந்திருக்கும்.

அப்பொழுது சுந்தரி அவன் தலையைத் தன்னுடைய கையாலிழுத்து, அவனுடைய காதைத் தன் வாயருகே வைத்துக் கொண்டு, தன்னுடன் வந்தவனுடைய நிலைமையைக்குறித்து,

இரண்டொருவார்த்தைகளை இரகசியமாகச் சொன்னுள். கோவிலதிகாரி சிறிதுநேரம் தன் தலையிற் கையைவைத்துக்கொண்டு, யோசித்துப் பிறகு சொன்னுன். "இது மிகவும் கஷ்டமான காரியம். மகாபுருஷன் மனதுவைத்தால் எல்லாம் கைகூடும். எப்படியாயினும் தேவியின் அருளால், உனக்கு யாதொரு கெடுதியும் வராது. மங்களமே உண்டாகும். அந்த மனிதன் எங்கே?" என்றுன்.

சுந்தரி மணிராஜனை "வாருங்கள்" என்று அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள். மணிராஜனை நோக்கி, அதிகாரி "நீங்கள் இன்று ராத்திரி இங்கேயே இருங்கள். பொழுதுபுலர்ந்தவுடன் தங்களுக்கு ஊருக்குப்போகிற வழியைக் காட்டுகிறேன்" என்று தயவுடன் சொன்னுன்.

மணிராஜன் அதுவரை ஆகாரம் செய்யவில்லை என்று அதிகாரிக்குப் பிறகு தெரிந்தது. ஆகாரம் உட்கொள்ளும்படி அவனிடம் அதிகாரி சொன்னதில், மணிராஜன் தனக்கு ஆகாரத்தில் விருப்பமில்லை என்றுகூறிப் படுத்துக்கொள்ள ஓர் இடம் கொடுக்கும்படி அவரைக் கேட்டு, அவரால் கொடுக்கப்பெற்ற சயனத்தில் அமர்ந்தான். பின்னர், சுந்தரி சமுத்திரக்கரைக்குப் போக முயன்றதுகண்ட அதிகாரி அதிக அன்புடன் அவள் முகத்தை நோக்கிச் சொன்னுர். "நீ போகவேண்டாம், சற்றுநேரம் இங்கேயிருப்பாயாக. எனக்கு ஒரு விருப்பம் இருக்கிறது. தயவுசெய்து அதை நீ நிறைவேற்றுவாயாக"

சுந்தரி:—"என்னவிருப்பம்"?

அதிகாரி:—"தேவியின் பாதகமலங்களைத்தொட்டு நான் சபதம்செய்கிறேன், தாயைக்காட்டிலும் உன்னிடம் நான் அன்பு பாராட்டுகிறேன். நான் செய்யும் பிரார்த்தனையை நீ அவமதிக்கமாட்டாயே".

சுந்தரி:—"அவமதிக்கவேமாட்டேன்".

அதிகாரி:—"எனது பிரார்த்தனை இதுவே. நீ அந்த இடத்துக்குத் திரும்பிப்போகக்கூடாது".

சுந்தரி:—"ஏன்?"

அதிகாரி:—"அங்கேபோனுல் உன்னைக் காப்பவர் இல்லை".

சுந்தரி:—"அது எனக்குத் தெரியும்"

அதிகாரி:—"அப்படியானல் நீ என்னிடம் 'ஏன்' என்று கேட்டதேன்?"

சுந்தரி:—"நான் அங்கே போகாமல் வேறு எங்கே போவது?"

அதிகாரி:—"நீ இந்த வழிப்போக்கனுடன் தேசாந்தரம்போய் விடுவாயாக."

சுந்தரி யாதொரு பதிலும் உரைக்காமல், வாயை மூடிக் கொண்டு அங்கேயே நின்ருள். அப்போது அதிகாரி வினவினர். "அம்மா! நீ என்ன ஆலோசிக்கிருய்".

சுந்தரி:—' "சிறுபெண்கள் யுவபுருஷர்களுடன் போவது உசிதமன்று" எனத் தங்கள் சிஷ்யர்களிடம் தாங்களே பலமுறை சொல்லியிருக்கிறீர்களே. இப்போது இந்த வழிப்போக்கருடன் செல்லும்படி எனக்குக் கட்டளையிடுகிறீர்களே! என்ன காரணம்?'

அதிகாரி:—"இதுவரை உனக்கு ஜீவனத்தின் அபேக்ஷை இல்லை. விசேஷமாக உனக்கு நல்லதோர் உபாயமும் ஏற்படவில்லை. இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீமாதாவின் அநுமதிபெற்றுப் போவாயாக".

இவ்விதமுரைத்து, அதிகாரி தீபத்தைக் கையிலேந்திக் கொண்டு கோவிலின் வாசலுக்குப்போய்க் கதவைத் திறந்தார். சுந்தரியும் அவருடன் சென்ருள். கோவிலில் மநுஷ்யாகிருதியுள்ளதான காளிதேவியின் உருவம் வைக்கப்பட்டிருந்தது. அவர்களிருவரும் தேவியை வணங்கினர்கள். அதிகாரி ஆசமனம்செய்து பழுதற்றதான ஒரு வில்வபத்திரத்தை எடுத்து, மந்திரங்களை உச்சரித்து அந்தத் தேவியின் பாதகமலங்களில் அர்ச்சனம் செய்தார். க்ஷணநேரம் கழித்து, அவர் சுந்தரியிடம் சொன்னர். "அம்மா! நீ கவனிப்பாயாக; அர்ச்சனத்தைத் தேவி கிரகித்துக்கொண்டாள். வில்வபத்திரத்தைக் கையிலெடுத்து, ஒருவன் ஒன்றை நினைத்துக் கொண்டு அர்ச்சனம்செய்ய, அதைத் தேவி கிரகித்துக்கொண்டால், அவன் நினைத்தகாரியம் அவசியம் கைகூடும்; அவனுக்கு எல்லா மங்களங்களும் உண்டாகும். நீ இந்த வழிப்போக்கருடன் செல்வாயாக. 'விஷயசபலர்'களின் நடத்தையும் சுவபாவமும் நமக்கு நன்ருய்த்தெரியும். அப்படிப்பட்டவர்களின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு செல்வாயானல் உனக்கு வெட்கமும் உண்டாகும்; ஜனங்களும் உன்னை நிந்திப்பார்கள். இவனைப் பார்த்தால்

சபலசித்தமுள்ளவனென்று தோன்றவில்லை. மேலும் இவன் பிராமணன் என்று நீயே சொல்லியிருக்கிறாய். இவன் மார்பிலும் 'யஜ்ஞோபவீதம்' விளங்குகிறது. இவனை நீ விவாஹம் செய்து கொண்டு பிறகு இவனுடன் நீ போவாயானால், உனக்குச் சர்வமங்களங்களும் கிடைக்கும். இல்லாவிடில் உன்னை இவனுடன் கூடப் போகும்படி சொல்லியிருக்கமாட்டேன்.

வி—வா—ஹ,—இந்த வார்த்தையைச் சுந்தரி எழுத்தெழுத்தாக மெதுவாக உரைத்தாள். ''விவாகம்'' என்று தங்களுடைய வாக்கிலிருந்துவந்தது. யார் விவாகம்செய்துகொடுப்பார்களென்றும், எவ்விதம் விவாகம் செய்துகொள்வதென்றும், எனக்கு நன்றாய்த்தெரியவில்லை' என்று சுந்தரி சொன்னாள்.

அதிகாரி:—புன்சிரிப்புடன் ''விவாகமென்பது பெண்களுக்குத் தர்மங்களுக்கெல்லாம் அடிப்படையாயிருப்பது! இதனால்தான் மாதர்களை ''ஸஹதர்மிணீ'' என்கிறார்கள். 'ஸ்ரீஜகன்மாதா'வும் பரமசிவனை விவாகம்செய்துகொண்டிருக்கிறாள்.''

மனதில் நினைத்ததையெல்லாம் அதிகாரி சொல்லிவிட்டார். சுந்தரி எல்லாவற்றையும் அறிந்தாள். மறுபடி அவள், ''அவரை விட்டுப் பிரிந்தால் நான் உயிருடன் இருப்பது அரிது; அவர் இதுவரை என்னைக் காப்பாற்றியிருக்கிறாரே,'' என இயம்பினாள்.

அதிகாரி:—''அவன் எதற்காகப் பரிபாலனம் செய்துவந்தான்? அதன் காரணத்தை நீ அறியவில்லை.'' என்று தாந்திரீகர்கள் பெண்களை ஏமாற்றுவதைக் குறித்துச் சுந்தரிக்கு அறிவித்தார்.

சுந்தரி:—''ஆனால் விவாகம் நடக்கட்டும்.''

பிறகு அவ்விருவரும் கோவிலைவிட்டு வெளியே வந்தார்கள். அங்கே ஓரிடத்தில் சுந்தரியை இருக்கச்செய்து அதிகாரி, மணிராஜன் படுத்திருக்குமிடம் சென்று, அவனது தலைப்புறத்தில் உட்கார்ந்துகொண்டு, ''ஐயா! நன்றாக நித்திரைசெய்தீரா? என வினவினார். மணிராஜனுக்கு இரவில் தூக்கம் வரவில்லை. தன்னுடைய நிலைமையைக்குறித்துத் துக்கப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் ''பெரியோரே! நான் தூங்கவேயில்லை'' எனப் பதிலுரைத்தான்.

அதிகாரி:—''நமக்குள் பரிசயம் இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் பிராமணரா?''

மணிராஜன்:—"ஐயா! ஆம். நான் பிராமணன்தான்."

அதிகாரி:—"என்னகோத்திரம்.?"

மணிராஜன்:—"பாரத்துவாஜகோத்திரம்"

அதிகாரி:—"தாங்கள் நல்லகுலத்தில் நல்ல கோத்திரத்தில் ஜனித்தவர்கள். இப்பொழுது தேவியின் சரணகமலங்களை ஆசிரயித்திருக்கிறீர்கள். தங்கள் நாமதேயம் என்னவோ?"

மணிராஜன்:—"சுப்பிரமண்யசர்மன்; ஆனால் உறவினர்கள் என்னை மணிராஜனென்று செல்லப்பெயர்கொண்டு அழைப்பார்கள்."

அதிகாரி:—"தங்களது நிவாஸம்?"

மணிராஜன்:—"ராஜசேகரநகரம்."

அதிகாரி:—"தங்களது கிராமம்?"

மணிராஜன்:—"திக்விஜயபுரம்."

அதிகாரி:—"தங்கள் கிருகத்தில் இன்னும் வேறு யார் இருக்கிறார்கள்?"

மணிராஜன்:—"என் தாயார் இருக்கிறார்கள்."

அவன் தனது சரித்திரத்தை அதிகாரியிடம் முழுதும் சொல்லவில்லை; தேவியின் ஆணையென்றும், சுந்தரி, தன்னுடைய உயிரைக் காப்பாற்றியவள் என்றும், அவள் பார்ப்பனப்பெண் என்றும், வேறு கோத்திரத்தில் பிறந்தவளென்றும் தெரிந்துகொண்டு, அவளை மணம்செய்துகொள்ள அரைவாசி உடன்பட்டான்.

அதிகாரி:—"குழந்தையாயிருக்கும்போது, திருடர்கள் இவளைத் தாய்தந்தையர்களின் வீட்டிலிருந்து களவாடிக்கொண்டுபோய் விட்டார்கள். காபாலிகன் இவளைத் தூக்கிக்கொண்டுபோய்த் தனது ஆச்சிரமத்திலேயே வளர்த்துவந்தான். இவளுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை. இவளது நடத்தை மிகவும் தூய்மைவாய்ந்தது. சிறிதுகாலம் கழித்துக் காபாலிகன் இவளைத் தனது 'உபாஸநாதேவி' யான பைரவிக்குப் பலியிட நினைத்திருந்தான்", என்று உரைத்தார்.

மணிராஜன்:—"தாங்கள் சாஸ்திரவிதிப்படி விவாகம்செய்து வையுங்கள்" எனப் பணிவுடன் சொன்னான்.

அதிகாரி:—“சுப்பிரமண்யசர்மா! தாங்கள் இப்போது படுத்துக்கொண்டு சற்றுநேரம் நித்திரைசெய்யுங்கள். காலையில் எழுப்பிவிடுகிறேன்; ராஜசேகரநகரத்துக்கு வழிகாட்டுகிறேன்” என்று சொல்லி அதிகாரி வெளியே சென்றார்.

தேவியின் கோவிலில்.

‘ஃபலூஂ ரூதிதேந, ஷ்ரீராஹவ, ஊதஃ வஂயா நாோலொகய.’
(ஶகுஂதலா)

[“அழுதது போதும்; தைரியத்துடனிரு. இங்கிருந்து மார்க்கத்தைப் பார்ப்பாயாக.”]

காலையில் மணிராஜனிடம் அதிகாரி வந்து, அவன் உறங்கவில்லையெனத் தெரிந்துகொண்டார். “இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?” என்று அவனைக் கேட்டார்.

மணிராஜன்:—“இன்றுமுதல், சுந்தரி எனது தர்மபத்தினி. வேண்டுமானால், இவளுக்காக நான் எல்லாவுலகங்களையும் துறப்பேன். யார் ‘கன்யாதானம்’ செய்துகொடுப்பார்கள்?” என்று சொன்னான்.

அந்தணர்தலைவரான அதிகாரியின்முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. “நானே கன்னிகாதானம் செய்துகொடுக்கிறேன்.” என்று அவர் ஆதரவுடன் சொன்னார். மறுபடியும் அவர் உள்ளே போய் ஒரு பழையபெட்டியிலிருந்து ஜீரணமான ஓர் ஏட்டுச்சுவடியை எடுத்து, அதிலிருந்து, திதி, வாரம், நக்ஷத்திரம் இவைகளைத் தெரிந்துகொண்டார்.

“இன்று விவாகத்துக்குப் பொருந்தினநாளாக இல்லாவிட்டாலும் “கோதூளி” வேளையில், (அதாவது பசுமாடுகள் மேய்ந்துவிட்டுத் தூளிகளை எழுப்பிக்கொண்டு, திரும்பிவரும்வேளையில்) நான் கன்யாதானம் செய்துகொடுக்கிறேன். இன்று பகலில் நீங்கள் உபவாசமாய் இருக்கவேண்டியிருக்கும். நல்லதானதோர் இடம் இங்கே இருக்கிறது; அங்கே நீங்கள் தங்கியிருக்கலாம்.” என்று பரிவுடன் சொன்னார். மணிராஜனும் அங்கே காத்திருந்தான். “கோதூளி” வேளையில் அவனுக்கும் சுந்தரிக்கும் “மங்களகர”மாக விவாஹம் நடந்தது. காபாலிகனாற் காப்பாற்றப்பெற்ற அந்தப் பிராமண கன்னிகைக்கும் மணிராஜனுக்கும் மணம் நிறைவேறிற்று.

காபாலிகனது நிலைமை என்னவென்று தெரியவில்லை. மறு நாட்காலையில் சிரஞ்சீவி மணிராஜனும், சௌபாக்கியவதி சுந்தரியும் யாத்திரைபுறப்படுமுன், சுந்தரி தேவியின் தரிசனத்துக்காகக் கோவிலுக்குப்போய்ப் பக்தியுடன் தேவியை வணங்கிப் புஷ்பக் கூடையிலிருந்து பழுதற்றதான ஒரு வில்வதளத்தை எடுத்து அம்பிகையின் பாதகமலங்களிற் சமர்ப்பித்தாள். அது கீழே விழுந்துவிட்டது. அதனால் அவள் திகிலடைந்து, அதிகாரியிடம் சொன்னாள். அவரும் வருத்தமடைந்து, சுந்தரியிடம், "உன் கணவனே உனக்குத் தெய்வம்; உன் நாயகன் எங்கேபோனாலும் நீயும் கூடப்போகவேண்டியவளே! அதுவே உனது கடமை; தர்மம்; ஆதலால் அவருடன் நீ செல்வாயாக." என்று சொன்னார்.

யாவரும் சத்தம் செய்யாமற் சென்றுகொண்டிருந்தார்கள். வெகுநேரம் கழித்து ராஜசேகரநகரத்துக்குப் போகும்வழி எதிர்ப் பட்டது. அப்பொழுது அதிகாரி விலகப்போனார். சுந்தரி விசனப் படத்தொடங்கினாள். இப்பூமண்டலத்தில் அவர் ஒருவரே அவளுக்கு ஆப்தமானவர். அவரைவிட்டுப் பிரியநேர்ந்ததால், அவள் துக்கித்தாள். அதிகாரியின் கண்களிலும் நீர் சுரந்தது. அதிகாரி, "பரமேசுவரியின்கருணையால் உனக்குச் செல்வக் குறைவே இல்லை. எப்போதும் தேவியின்பூஜையை நீ தவறாமல் செய்வாயாக. உனக்கு எது பிரசாதமாகக்கிடைக்குமோ, அதை உன் நாயகனுக்கு நிவேதனம் செய்து அவர் எடுத்துக்கொடுப்ப தைப் பெற்றுக்கொள். உனக்கு ஒருகுறைவும் வராது." என்று அவர் சுந்தரியின்காதில் இரகசியமாகச்சொல்லியும், மணிராஜ னிடம் வழிச்செலவுக்காகச் சிறிது பொருள்கொடுத்தும், பிரிந்தார். சுந்தரியும் அழுதுகொண்டே சென்றாள்.

முதலாவது கண்டம் முற்றிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்த்ரி.